# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும்

## தொகுதி – III



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் கே. சுபாஷினி

முனைவர் சு. இராமலிங்கம்

# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியங்களும் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


பதிப்பாசிரியர்கள் : **முனைவர் க. முருகேசன்**
**முனைவர் சு. குமரன்**
**முனைவர் கே. சுபாஷினி**
**முனைவர் சு. இராமலிங்கம்**

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : டிசம்பர், 2017

வெளியீடு : **தமிழ்த்துறை**
**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**
கோயம்புத்தூர் - 641029.

கணினி : பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29.

அச்சாக்கம் : பிரடாக் பிரிண்ட்,
476, பூமாதேவி கோவில் அருகில்
கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)
கோயம்புத்தூர் - 29.
அலைபேசி : 98432 73994, 91505 91017

பக்கங்கள் : X + 460 = 470

விலை : உரூ. 350/-

**ISBN : 978 - 93 - 85267 - 38 - 3**


# International Conference on Tamil Literature and Tamil Scholars of the 20th Century


Editor's : **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**
**Dr. K. Subhashini. Dr. S. Ramalingam**

Copyright's : Editors

First Edition : December, 2017

Published : **Department of Tamil**
**Kongunadu Arts and Science College**
Coimbatore - 641 029.

Computer : **Prdag Print**, Coimbatore - 29.

Printing at : **Prdag Print**
476, Near Boomadevi Kovil
G.N. Mills (Po), Coimbatore - 29.
Cell : 98432 73994, 91505 91017

Pages : X + 460 = 470

Prize : **Rs. 350/-**

223. ரா. பிரேமாவதி 1003
வைரமுத்துவின் பெண்ணியச் சிந்தனைகள்

224. இரா. கலாராணி 1009
சிலப்பதிகாரத்தில் ந.மு.வேங்கடசாமி நாட்டாரின் உரைத்திறன்

225. சா. ரெபேக்காள் 1015
நற்றிணையில் பின்னத்தூர் அ.நாராயணசாமி ஐயரின் உரைத்திறன்

226. முனைவர் க. சிவனேசன் 1019
தி.ஜானகிராமனின் வாழ்வும் பணியும்

227. முனைவர் க. பழனிவேல் 1025
அடிகளாசிரியர் என்னும் பல்கலையாசான்

228. ப. கருப்புசாமி 1031
பேராசிரியர் ந. இரா. சென்னியப்பனாரின் இரத்தினகிரி பாலமுருகன் பிள்ளைத்தமிழ்

229. சொ. இளங்கோ 1036
சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்வும் தமிழ்த் தொண்டும்

230. முனைவர் ஜெ. நிஷாந்தினி 1040
முருகு சுந்தரத்தின் வெள்ளை யானை கவிதை- ஒரு பார்வை

231. முனைவர் ச. அரிச்சந்திரன் 1044
கவிப்பேரரசு வைரமுத்து

232. முனைவர் ம. கீதா 1050
பாரதியின் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும்

233. முனைவர் இரா. மணிமேகலை 1054
திருமுருக கிருபானந்த வாரியார் வாழ்வும் பணிகளும்

234. முனைவர் பொ. மோகனா 1059
நீதி இலக்கியங்களில் பண்பாட்டுக் கூறுகள்

235. முனைவர் கு. முத்துக்குமார் 1062
பேராசிரியர் ப. மருதநாயகத்தின் பாரதியம்

236. பா. பொன்னுராஜன் 1066
செய்குதம்பிப் பாவலரும் அவதானக் கலையும்

237. ரா. ராமலெட்சுமி 1070
முனைவர் திலகவதி சண்முகசுந்தரம் அவர்களின் திருப்புகழ் உரைநயம்

238. முனைவர் ஆ. சரவணன் 1075
ஊரன் அடிகளார் பார்வையில் வள்ளலாரும் பாரதியாரும்

230

# முருகு சுந்தரத்தின் “வெள்ளை யானை” கவிதை – ஒரு பார்வை

**முனைவர் ஜெ. நிஷாந்தினி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோவை-641 029.*

கவிதையென்பது என்னவென்று ஒற்றை வார்த்தையில் ஒற்றை வரியில் சொல்லிவிட முடியாது. கவிதையின் வடிவம் காலம் காலமாக மாறிக் கொண்டே வருகிறது. இதனை மாற்றம் என்பதைவிட வளர்ச்சியென்றே கூறலாம். இந்தக் கருத்திற்குச் சான்றாக முருகு சுந்தரத்தின் கவிதைகளைக் கூறலாம். இலக்கியத்தில் இன்று மிஞ்சி நிற்பது விஞ்சி இருப்பது பெண்ணியமும் தலித்தியமும்தான். தலித்தியம் தாழ்த்தப்பட்டவர்களின் குரலாக ஒலிக்கிறது. பெண்ணியம் ஓர் இனத்தின் குரலாக ஒலிக்கிறது. அந்த வகையில் 'வெள்ளையானை' பெண்ணியத்துக்கான படைப்பு என்றே கூறலாம்.

## பெண்ணியம்

ஆண்களின் படைப்புக்களில் பெண்கள் அடங்கிப் போகும் குணமுடையவர்களாக, உருவமற்றவர்களாக, மனவுலைச்சலுக்கு ஆட்பட்டவர்களாக, கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக, பொருள் பற்றுடையவர்களாக, ஆன்மீக நம்பிக்கையுடையவர்களாக, பகுத்தறிவுக்கு மாறானவர்களாக, கவர்ச்சி மற்றும் சூன்யம் உடையவர்களாக என்று முரண்பட்ட குணமுடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். சமூகம், பண்பாடு, அரசியல் மற்றும் தனிப்பட்ட சூழல் என்று எல்லா நிலைகளும் ஆண் மேலாதிக்கம் வேரூன்றியிருப்பதால், அவர்கள் படைக்கின்ற இலக்கியங்களும் அதற்கு விதிவிலக்காக அமையவில்லை. ஆனால் முருகுசுந்தரம் ஒரு ஆண் படைப்பாளராக இருந்தாலும் ஒரு பெண்ணின் மனவுறுதியையும், உணர்வை மிகத்துணிச்சலாக அகலிகை மூலம் வெளிப்படுத்துகிறார். அகலிகை தொன்மத்தைப் பெண்ணியச் சிந்தனைச் சுடர்களோடும், நுண்ணிய உளவியல் பார்வையோடும், தமிழுக்குப் புதிதான சர்ரியலிசப் படிமங்களோடும் புதுப்புனைவு செய்துள்ளார் கவிஞர்.

***'அகல்யா***
***உன் முடிவு தான் என்ன?***
***என்றார் விசுவாமித்திரர்***
***சுவாமி,***
***நீங்கள்***
***சர்வவல்லமைபடைத்தவர்***
***என்னை***
***ஒருயானையாக்கி***
***அமராபதியின்***
***கற்பகச் சோலையில்***
***விட்டுவிடுங்கள்***